பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
16 09 2025 TUESDAY 7.15 PM

ஆகாஷவாணி
தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடி தேசிய ஊட்டச்சத்து மாத விழாவை நாளை தொடங்கி வைக்கிறார்.

- நடப்பு நிதியாண்டில் 3 கோடியே 62 லட்சம் டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

- அனைத்து அரசு அலுவலகங்களிலும் ஸ்மார்ட் மீட்டர் பொருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. மனோகர்லால் கூறியுள்ளார்.

- BUSAN சர்வதேச திரைப்பட விழாவில் பங்கேற்பதில் பெருமை கொள்வதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

- சர்வதேச மகளிர் ஒருநாள் கிரிக்கெட் பேட்டிங் தரவரிசை பட்டியலில் இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<<<<>>>>>>>>>>

தேசிய ஊட்டச்சத்து மாத விழாவை பிரதமர் திரு. நரேந்திர மோடி மத்தியப்பிரதேச மாநிலம், Dhar மாவட்டத்தில், நாளை தொடங்கி வைக்கிறார்.

ஊட்டச்சத்து மாத விழா நாளை தொடங்கி, அடுத்த மாதம் 2-ஆம் தேதிவரை அனைத்து சமூக சுகாதார மையங்களிலும், மாவட்ட மருத்துவமனைகளிலும் நடத்தப்பட உள்ளது.

ஆரோக்கியமான பெண் – வலுவான குடும்பம் திட்டத்தின் கீழ், நாடுமுழுவதும் ஒரு லட்சம் சுகாதார முகாம்கள் நடத்தப்படவுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்த முகாம்களில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், பிரதமரின் மாத்ரு வந்தனா திட்டத்தின்கீழ், பத்து லட்சம் மகளிரின் வங்கிக்கணக்குகளில் உதவித்தொகை நாளை செலுத்தப்படவுள்ளது.

<<<<<<<<<<>>>>>>>>>>

நடப்பு நிதியாண்டின் ரபி பருவத்தில் 3 கோடியே 62 லட்சம் டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற மாநில வேளாண்துறை அமைச்சர்கள் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நடப்பு நிதியாண்டில் உணவு தானிய உற்பத்தி இலக்கு கடந்த ஆண்டை விட 2 புள்ளி நான்கு சதவீதம் அதிகமாக உள்ளதாக கூறினார்.

ஒரே நாடு – ஒரே விவசாயம் – ஒரே அணி என்ற கருப்பொருளின் அடிப்படையில் நடைபெற்ற இந்த கூட்டத்தின் மூலம், வேளாண் துறையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<<<<>>>>>>>>>>

அனைத்து அரசு அலுவலகங்களிலும் ஸ்மார்ட் மீட்டர் பொருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர்லால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மின் பகிர்மானம் குறித்த அமைச்சர்கள் குழுக் கூட்டத்தில் பேசிய அவர், பொதுமக்கள் தரமான மின்பகிர்மானம் செய்வது உறுதி செய்யப்படும் எனறு கூறினார்.

மின்துறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள மத்திய – மாநில அரசுகள், முறைப்படுத்தும் ஆணையத்துடன் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<<<<>>>>>>>>>>

நாட்டின் சுகாதார பரிமாற்றத்தில் மருத்துவ தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஆசிய – பசிபிக் மருத்துவ தொழில்நுட்ப அமைப்பு ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில், காணொலி மூலம் உரையாற்றிய அவர், பொதுமக்களுக்கு மருத்துவ சேவை எளிதாக கிடைப்பதில் மருத்துவ தொழில்நுட்பம் முக்கியத்துவம் பெறுவதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல், மருத்துவ உபகரணங்கள் உற்பத்தியில் 100 சதவீத வெளிநாட்டு முதலீடுகளுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

<<<<<<<<<<>>>>>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு கிடைத்த ஆயிரத்து 300-க்கு மேற்பட்ட பரிசுப் பொருட்கள் இன்று முதல் இணையதளம் மூலம் ஏலத்தில் விடப்படவுள்ளதாக மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று இதனை தெரிவித்த அவர், இதன்மூலம் கிடைக்கும் நிதி, நமாமி கங்கை இயக்கம் உள்ளிட்ட அரசு திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும் என்றார்.

<<<<<<<<<<>>>>>>>>>>

இந்தியாவின் அண்டை நாடுகளுக்கு முதன்மை என்ற கொள்கையின் அடிப்படையில் மொரீசியஸ் நாட்டிற்கு சிறப்பிடம் உள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று குடியரசுத் தலைவரை, அவரது மாளிகையில் மொரீசியஸ் பிரதமர் திரு. நவீன்சந்திர ராம்கூலம், சந்தித்து பேசினார்.

இந்தியா – மொரீசியஸ் இடையேயான இருதரப்பு உறவுகள் மேலும் வலுவடையும் என்று திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கு இடையேயான நட்புடன் கூடிய உறவு, முக்கியமானது என்றும், வரலாறு, மொழி, கலாச்சாரம், நன்மதிப்பு போன்றவற்றை இருநாடுகளும் பகிர்ந்து கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மொரீசியஸ் நாட்டிற்கு இந்தியா அளிக்கும் சிறப்பு பொருளாதார உதவி மூலம், அந்நாட்டு மக்களின் தேவைகள்

நிறைவேற்றப்படும் என்று குடியரசுத் தலைவர் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<<<<<>>>>>>>>>>

BUSAN சர்வதேச திரைப்பட விழாவில் பங்கேற்பதில் பெருமை கொள்வதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

WAVES மற்றும் Bharat Parv மூலம் இந்தியாவின் திறன்மிக்க பொருளாதாரம், பாரம்பரியம் மற்றும் திறமை பறைசாற்றப்படும் என்று அவர் கூறினார்.

தென்கொரியாவில் நாளை தொடங்கவுள்ள BUSAN சர்வதேச திரைப்பட விழாவில் அமைச்சர் டாக்டர் எல். முருகன் தலைமையிலான பிரதிநிதிகள் குழு கலந்து கொள்ளவுள்ளது.

இந்த திரைப்பட விழா, நாளை தொடங்கி வரும் 26ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

<<<<<<<<<<>>>>>>>>>>

பிரதமரின் மீன்வள திட்டத்தின்கீழ் மானிய விலையில் விசைப்படகுகள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டம் ஆழ்கடல் மீனவர்களுக்கு மிகுந்த பயனளிப்பதாக தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டம் தருவைக்குளத்தை சேர்ந்த மீனவர் ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(Voice Byte – மீனவர் 38 Sec.)

<<<<<<<<<<>>>>>>>>>>

பீகார் மாநிலத்தில் மாணவர் கடன் அட்டை திட்டத்தின் கீழ், 4 லட்சம் ரூபாய்வரை, வட்டியில்லாமல் வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார் அறிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், 12ஆம் வகுப்பு முடித்த மாணவர்கள், உயர்கல்வி பெறுவதற்கு இந்த மாணவர் கடன் அட்டைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

இத்திட்டத்தின் கீழ், பொதுப்பிரிவு மாணவர்கள் இதுவரை, 4 சதவீத வட்டி செலுத்தி வந்ததாகவும், இந்த வட்டி ரத்து செய்யப்படும் என்றும் திரு. நிதிஷ்குமார் தெரிவித்தார்.

<<<<<<<<<<>>>>>>>>>>

போதைப்பொருள் இல்லாத சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், தமிழகத்தின் சென்னை தீவுத்திடலில் இம்மாதம் 28-ஆம் தேதி Soles for Souls என்ற விழிப்புணர்வு ஓட்டப்பந்தயம் நடைபெறவுள்ளது.

மத்திய தோல் ஏற்றுமதிக்கழகம் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளதாக அதன் செயல் இயக்குனர் திரு ஆர் செல்வம் இன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(Voice Byte – செல்வம் - 43 Sec.)

<<<<<<<<<<>>>>>>>>>>

ஜம்மு கஷ்மீரின் Doda மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக தடை செய்யப்பட்டிருந்த இணையதள சேவை இன்று செயல்பாட்டுக்கு வந்தது.

ஆம் ஆத்மி கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. Mehraj Malik, கடந்த 8ஆம் தேதி கைது செய்யப்பட்டதை அடுத்து ஏற்பட்ட போராட்டங்களை கட்டுப்படுத்தும் வகையில், இணையதள சேவை தடை செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<<<<>>>>>>>>>>

உத்ராகண்டில் பெய்த கனமழை காரணமாக இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் டேராடூனில் பல வீடுகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளது

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட Paundha கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த 200 மாணவர்களை மாநில பேரிடர் மீட்புக் குழுவினர் பாதுகாப்பாக மீட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<<<<>>>>>>>>>>

சர்வதேச மகளிர் ஒருநாள் கிரிக்கெட் பேட்டிங் தரவரிசை பட்டியலில் இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் இன்று வெளியிட்டுள்ள பட்டியலில், இங்கிலாந்து கிரிக்கெட் அணித் தலைவர் Nat Sciver-ஐ பின்னுக்குதள்ளி, ஸ்மிருதி மந்தனா முதலிடம் பெற்றுள்ளார்.

ஆசிய கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் தொடரிலிருந்து, நடுவர் Andy Pycroft-ஐ மாற்ற வேண்டும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் வேண்டுகோளை, சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் நிராகரித்துள்ளது.

துபாயில் அண்மையில் இந்திய – பாகிஸ்தான் இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டிக்குப் பின்னர், மைதானத்தில் இந்திய வீரர்கள், பாகிஸ்தான் வீரர்களுடன் கைகுலுக்க தவறியதற்கு எதிர்ப்பு தெரிவித்து, நடுவர் Andy Pycroft-க்கு எதிராக பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் புகார் அளித்திருந்தது.

<<<<<<<<<END>>>>>>>>>